**செய்தி வெளியீடு எண்: 016** **நாள்: 04.01.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று **(4.1.2018)** தலைமைச் செயலகத்தில், மதுரை மாவட்டம், வடபழஞ்சி கிராமத்தில் தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் அமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் (எல்கோசெஸ்) **14** கோடியே **99** லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் **20** கோடியே **9** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம் ஆகியவற்றை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு திட்ட அறிக்கை 2023-ல் குறிப்பிட்டபடி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த தொழில்கள் தமிழகத்தில் தழைத்து வளர தமிழ்நாடு அரசின் கொள்கை அடிப்படையில் தமிழ்நாடு மின்னணு நிறுவனம் சென்னை மற்றும் இரண்டாம் நிலை நகரங்களான கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி, ஓசூர் ஆகிய இடங்களில் 8 தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் சார்ந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை (எல்கோசெஸ்கள்) நிறுவியுள்ளது.

தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தால் மதுரை மாவட்டம், வடபழஞ்சி கிராமத்தில் **245.17** ஏக்கர் பரப்பளவில் எல்கோசெஸ் நிறுவப்பட்டுள்ளது. இந்திய அரசு, இந்த எல்கோசெஸ்ஸில் **213** ஏக்கர் நிலப்பரப்பளவிற்கு சிறப்புப் பொருளாதார மண்டல அந்தஸ்து வழங்கியுள்ளது. தமிழ்நாடு மின்னணு நிறுவனம் **14** கோடியே **99** லட்சம் ரூபாய் செலவில், இந்த எல்கோசெஸ்சில் உட்புறச் சாலைகள், மழை நீர் வடிகால்வாய் வசதிகள், நடைபாதைகள், தரவு கேபிள் அகழி, மின் கேபிள் அகழி, நுழைவாயில், சுற்றுப்புற சுவர் உள்ளிட்ட அனைத்து பொது உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மதுரை, வடபழஞ்சி கிராமம், எல்கோசெஸ்சில் **20** கோடியே **9** லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இரயில்வே மேம்பாலம் ஆகியவற்றை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.செல்லூர் கே. ராஜூ, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் டாக்டர் எம்.மணிகண்டன், தலைமைச் செயலாளர் (முழு கூடுதல் பொறுப்பு) திரு.க. சண்முகம், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பவியல் துறை முதன்மைச் செயலாளர் திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ஆர்.சுடலை கண்ணன், இ.ஆ.ப., மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே. வீரராகவ ராவ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 4.1.2018**